பதிவு எண்: M. 6811 ★ தொலைபேசி: 51831 நிறுவியது: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆடி 11 (26—7—68) வெள்ளி ★ வெளியூர்: ஆடி 12 (27—7—68) சனி [இதழ்: 36

தமிழகத்து சர்க்கரை ஆலையின் சிறப்பு!

புதுடில்லி, ஜூலை 26—

சர்க்கரை ஆலைக்காரர்கள், கரும்பு உற்பத்தியாளருக்கு ரூ. 2.37 கோடி வரை கொடுக்காமல் பாக்கி வைத்துள்ள போதிலும், தமிழகத்தில் நெல்லிக்குப்பத்தில் உள்ள சர்க்கரை ஆலை, உற்பத்தியாளரிடமிருந்து வாங்கிய ரூ. 4-கோடி பெறுமானமுள்ள கரும்புக்குப் பாக்கி எதுவும் வைக்காமல் பணம் கொடுத்துவிட்டது;

உணவு -- விவசாயத் துணை அமைச்சர் ஷிண்டே, இந்தத் தகவலை மக்களவையில் தெரிவித்தார்.

இந்திமொழி அறியாத அரசு ஊழியர்களுக்கு ஆபத்து

இந்தி மாநிலத்துடன் இந்தியிலேயே அலுவல் நடக்குமாம்!

ஆங்கில மொழிபெயர்ப்புப் பிரதிகள் அனுப்பப்படமாட்டாதாம்!

கணக்கு வழக்கு இல்லாமல் இந்திக்காகப் பணம் செலவிட முனைந்துள்ளது டில்லி

புதுடில்லி, ஜூலை 26—

இந்தியை ஆட்சிமொழியாகக்கொண்ட எல்லா மாநிலங்களுடனும் கடிதத் தொடர்புகொள்ளும்போது இந்தி மொழியில் மட்டுமே எழுதுமாறும், அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு அனுப்பத் தேவையில்லை என்றும், எல்லா மத்திய அரசுத் துறைகளுக்கும் உள்துறை அமைச்சகம் குறிப்பு அனுப்பியிருக்கிறது.

மத்திய அரசின் இம்முடிவினால், இந்தி மொழியை ஆட்சிமொழியாகக்கொண்ட மாநிலங்களில் உள்ள இந்தி தெரியாத பிற மொழி அதிகாரிகள் எந்த அளவுக்குத் தொல்லைக்குட்படுவார்கள் என்பது யோசிக்கத்தக்கது.

'வேண்டுமென்றால், இந்திக் கடிதத்தைப் பெறும் மாநிலங்கள், தாங்களே ஆங்கில மொழிபெயர்ப்புப் பணியைச் செய்து கொள்ளட்டும்' என்று உள்துறை அமைச்சகம் கருதுகிறதாம்.

இந்தியை ஆட்சிமொழியாகக் கொண்டிராத மாநிலங்களுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பு அனுப்பப்படுமென்றும், ஆனால் வேறு மொழிகளை ஆட்சிமொழியாகக்கொண்ட மாநிலங்களுக்கு --- அவர்களது மொழியில் மொழிபெயர்த்து அனுப்பப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய அமைச்சகத்திற்குள், 'பைல்'களில் குறிப்பெழுதுவதற்கு இந்தியையோ, ஆங்கிலத்தையோ பயன்படுத்தலாம் என்றும், அப்படிக் குறிப்பு எழுதப்பட்ட மொழியில் சம்பந்தப்பட்ட ஊழியருக்கு அனுபவம் இல்லையென்றால், அவருக்கு மொழிபெயர்ப்புப் பிரதிகள் அளிக்க வசதி செய்யப்படுமென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்குக் கடிதம் எழுதும்போது, இந்தி அல்லது ஆங்கில மொழி பெயர்ப்பு இணைக்கப்படுமென்றும், ஆனால் அனுப்பும் இலாகா துறையும், பெறும் துறையும் இந்தியில் அலுவல் நடத்தும் பயிற்சி பெற்றிருக்குமானால், மொழிபெயர்பபு அனுப்பவேண்டிய அவசியமில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியையும், ஆங்கிலத்தையும் ஒன்றாகப் பயன்படுத்துவது சம்பந்தமாக விரிவான உத்தரவுகள் எல்லாத் துறைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

தேவைப்படும் முன் பணத்தை நிதித் துறையிடமிருந்து கேட்டுப் பெற்று, ஆட்சிமொழிச் சட்டத்தைச் செயல்படுத்துமாறும் எல்லா அமைச்சுத் துறைகளும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஏராளமான மொழிபெயர்ப்பாளர்களும், தட்டெழுத்தாளர்களும், தட்டெழுத்துக்களும் இதற்குத் தேவைப்படக்கூடும்.

இதற்காக எவ்வளவு செலவாகும் என்பது குறித்து உள்துறை அமைச்சகத்திடம் எந்த மதிப்பீடும் இல்லை.

அதனால்தான், தேவைப்படும் பணத்திற்கு நிதி அமைச்சகத்தை அணுகுமாறு கோரப்பட்டிருக்கிறது,

★

வேலை நேரத்தில் இந்தி படிக்கிறார்களாம்

பரீட்சையில் தேறினால் பரிசும், சிறப்பு ஊதியமும் கிடைக்குமாம்

புதுடில்லி, ஜூலை 26—

அஞ்சல் — தந்தித்துறை ஊழியர்கள் இந்திப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றால், அவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும், சிறப்பு ஊதியமும் தரப்படுமாம்.

இந்தி கற்பதற்காக இவ்வாறு பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன.

உள்துறை அமைச்சகத்தின் திட்டப்படி, அஞ்சல்–தந்தித்துறை நிர்வாக அலுவலகங்களில் உள்ள ஊழியர்கள் வேலைநேரத்தில் இந்தி மொழி கற்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்; மற்றவர்களுக்காக இரவு நேரப் பள்ளிகள் அமைக்கப்படுகின்றன.

இந்தி வெறியரின் விதண்டா வாதம்

அமைச்சர் செகசீவன்ராம் சூடான பதில்

புதுடில்லி, ஜூலை 26—

இந்தியில் கேட்கப்பட்ட கேள்விக்கு உணவுத்துறை அமைச்சர் செகசீவன்ராம் ஆங்கிலத்தில் பதிலளித்தபோது, இந்தி வெறியரான

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசு ஆளும் மாநிலத்தில்...

தெருவில் பெண்கள் நடமாட முடியவில்லை

பம்பாய், ஜூலை 25—

கார்களைத் திருடியதாகவும், பெண்களைத் தாக்கியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞர்கள் எட்டுப் பேர் பம்பாய் போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாலையில் உள்ள கார்களைத் திருடி—அவைகளில் இளம் பெண்களுக்கு இடமளித்து—அவர்களிடம் தகாத முறையில் நடந்துகொள்வது இவர்கள் வழக்கமாம்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் திரைப்பட நடிகரென்றும், ரூ. 20,000 பெற்றுக்கொண்டு திரைப்பட நிறுவனமொன்றில் இவர் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளார் என்றும் போலீசார் கூறினர்.

சனநாயக ஆட்சிமுறை முறிந்துவிட்டது

சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப மாநில ஆளுநர் நடப்பதா?

பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சித் திணிப்பு அநீதி -- நாடாளுமன்றத்தில் இரா. செழியன் கண்டன முழக்கம்

"பீகார் கவர்னர் நியாயமாக நடந்துகொள்ளவில்லை; 'சட்டமன்றத்தைக் கலைக்கவேண்டும்' என்ற -- ஐக்கிய முன்னணியின் முன்னாள் முதலமைச்சர் போலோ பஸ்வான் சாஸ்திரியின் யோசனையை -- கவர்னர் நேரடியாகச் செயல்படுத்தவில்லை; காங்கிரசுக் கட்சித் தலைவரை அழைத்து, 'அவரால் அமைச்சரவை அமைக்க முடியாது' எனத் தெரிந்துகொண்ட பின்னர்தான், கவர்னர், சட்டமன்றத்தைக் கலைப்பதற்கு யோசனை கூறியிருக்கிறார். ஆனால், அதற்குப்பிறகு, பஸ்வான் சாஸ்திரி, 'அமைச்சரவை அமைப்பதற்குத் தமக்கு மீண்டும் ஒரு வாய்ப்புத் தரவேண்டும்' என்று கோரியபோது, அதற்குக் கவர்னர் ஒத்துழைக்கவில்லை.

"தமது விருப்பு வெறுப்புக்கேற்ப, சட்டமன்றக் கட்சிகளின் பலத்தை முடிவு செய்யும் அதிகாரத்தைக் கவர்னருக்கு அளிக்கும்வகையில், அரசியல் சட்டத்தில் அமைந்துள்ள ஓட்டைகளே இப்படிப்பட்ட செயல்களுக்குக் காரணமாகும்."

இவ்வாறு மக்களவையில், கழக உறுப்பினர் இரா. செழியன் அவர்கள், பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சிக்கு ஒப்புதல் அளிப்பதுபற்றிய பிரச்சினைமீது பேசுகையில் சுட்டிக்காட்டினார். மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"மத்திய ஆட்சியால் நியமிக்கப்படும் கவர்னர்கள், அரசியல் ரீதியாக விருப்பு -- வெறுப்புக்கு உள்ளாகிவிடாதபடி உத்தரவாதம் செய்யப்படவேண்டும். இதற்காக அரசியல் சட்டத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டும்.

"தோற்ற காங்கிரசுக்காரர்கள், கவர்னர்களாக நியமிக்கப்படுவது கண்டு வருந்துகிறேன்.

"ஐக்கிய முன்னணி முதலமைச்சர் போலோ பஸ்வான் சாஸ்திரி பதவி துறந்த பின், மாற்று ஆட்சி அமைக்கக் காங்கிரசாரை மட்டுமே கவர்னர் அழைத்துள்ளார். கவர்னர், முதலில், ஐக்கிய முன்னணியினரை அழைத்திருக்க வேண்டும்.

"காங்கிரசுக் கட்சியின் தன்னலத்திற்காகப் பீகார், அரியானா, உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சி திணிக்கப்பட்டுவிட்டது!

"பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்தியிருப்பது, 'சனநாயகச் செயல் முறைகள் முறிந்துவிட்டன' என்பதையே குறிப்பிட்டுக் காட்டுகிறது!"

பீகார் அரசியல் நிலைமை-- மிகுந்த விழிப்புடன் கண்காணிக்கப்படுகிறதாம்

புதுடில்லி, ஜூலை 25—

பீகார் மாநிலச் சட்டமன்றத்தைக் கலைத்து குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டதற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கும் வகையில், உள்துறை அமைச்சர் சவான் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இன்று விவாதத்துக்கு வந்தது.

"பீகாரின் அரசியல் நிலைமையை மத்திய அரசு மிகுந்த விழிப்புடன் கண்காணித்து வருகிறது.

"சட்டம் — அமைதி சீர்குலைந்ததையொட்டி, 'வேறு வழியில்லை' என்ற நிலைமை ஏற்பட்ட பிறகுதான் குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது"

என்று தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசுகையில், திரு. சவாண் குறிப்பிட்டார்.

விவாதத்தில் கலந்துகொண்ட எதிர்க் கட்சியினர், பீகார் கவர்னரின் நடவடிக்கையைக் கண்டித்தனர்; ஆனால், சட்டம்—அமைதி நிலைமை குழு அளவுக்குச் சீர்குலைந்தது என்பதை அவையின் எல்லாத் தரப்பினரும் ஒப்புக்கொண்டனர்.

உலகின் மிகப் பெரிய கப்பல்

வெள்ளோட்டம் துவக்கம்

யோகோகாமா, ஜூலை 26—

3,12,000 டன் எடையுள்ள உலகின் மிகப் பெரிய எண்ணெய்க் கப்பலான 'யுனிவர்சல் அயர்லாந்து' சோதனைக்காகத் தனது 6 நாள் பயணத்தை மேற்கொண்டது.

ரூ. 15 கோடி செலவில் ஜப்பானிய கம்பெனி ஒன்றினால் கட்டப்பட்ட இக்கப்பல், குவெய்த்திலிருந்து அயர்லாந்துக்கு எண்ணெய் ஏற்றிச்செல்லப் பயன்படுத்தப்படுமாம்.

ஊழல்களுக்கு உடந்தையாக மொரார்ஜி தேசாய்!

வியாபார நிறுவனத்திடம் ஊதியம் பெற்றுவந்தார் தேசாயின் மகன்

ஆதாரத்துடன் லிமாயி வெளியிட்ட தகவல்---பதவி விலக மறுத்து மொரார்ஜியின் மழுப்பல்

புதுடில்லி, ஜூலை 24—

"தேசாயின் மகன் கந்திலால் தேசாய், 1965 முதலே வியாபார நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார். டாட்சல் நிறுவனத்துடன் அவர் 1960-ல் செய்து கொண்ட மற்றோர் ஒப்பந்தப்படி அவருக்கு முதல் ஆண்டில், மாதந்தோறும் ரூ. 1650 ஊதியம் தரப்பட்டது; அதன் பிறகு, மாதந்தோறும் ரூ. 2050 ஆக ஊதியம் உயர்ந்தது. அது தவிர இலாபத்திலும் பங்கு உண்டு. 1965 ஜூலையில் மூன்றாவது ஒப்பந்தம் ஒன்றையும் தேசாயின் மகன் அந்த நிறுவனத்துடன் செய்துகொண்டார்.

"தேசாயின் மகன் கந்திலால் தேசாய் இந்நிறுவனத்துக்கு செய்த 'மதிப்பு மிக்க சேவை'யைக் கருதி 1965 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மாதந்தோறும் ரூ. 2050 ஊதியத்தை மூன்று ஆண்டுகளுக்கு நிறுவனம் அளித்துவரும்—என்று இந்த மூன்றாவது ஒப்பந்தம் கூறுகிறது.

"மாதத்துக்கு ரூ. 2,050 ஊதியம் கந்திலால் தேசாயின் 'கடந்தகால சேவை'களுக்காக மூன்று ஆண்டுகளுக்குத் தரப்படுகிறது என்பது சாதாரண காரியமல்ல; ஏனெனில், இந்தியாவின் தலைமை நீதிபதி கூட, தமது நீண்டகால சேவைக்குப் பின்னர் இவ்வளவு அதிகமான தொகையை 'ஓய்வுப் பண'மாகப் பெறுவதில்லை!

"1965 மார்ச் 31-ல் இந்தச் சம்பளம் நிறுத்தப்பட்டதும், இந்நிறுவனத்தில் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன; சம்பளம் கொடுக்கப்பட்டுவந்த வரையில் அந்நிறுவனத்தில் சோதனைகள் நடத்தப்படவில்லை. இச் சோதனைகள் நடக்கப்பட்ட போது கந்திலால் தேசாய் செய்துகொண்ட ஒப்பந்த விவரங்கள் அடங்கிய தாள்களும் சிக்கிவிட்டன என்பது அவருக்குத் தெரிந்திருக்காது"

என்று நாடாளுமன்றத்தில், ச. சோ. கட்சி உறுப்பினர் திரு. மது லிமாயி, துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் மீது ஒழுங்குப் பிரச்சினையெழுப்பி, அவர் இராஜிநாமா செய்யவேண்டும் என்று வற்புறுத்திப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"மொரார்ஜி தேசாய், தம் மகன் கந்திலால் தேசாய் 1964 முதல் தம் அந்தரங்கச் செயலாளராக ஆனதிலிருந்து வியாபார நிறுவனங்களுடன் தொடர்புகொள்ளவில்லை என்று 1968 ஏப்ரல் முதல் நாளன்று நாடாளுமன்றத்தில் அறிவித்தது தவறான ஒழுங்குமீறிய செயலாகும்; அதற்காக அவரைக் கண்டிக்கவேண்டும்" என்று கோரி மது லிமாயியும், மற்றும் சிலரும் ஒழுங்குப் பிரச்சினை கொணர்ந்தனர்.

தேசாயின் மகன் கந்திலால் தேசாய், 'மெசர்ஸ் டாட்சல் பிரைவேட் லிமிடெட்' என்ற நிறுவனத்துடன் 1955 முதல் தொடர்பு கொண்டுள்ளார் என்பதற்கு ஆதாரமாகப் புகைப்படம் எடுக்கப்பட்ட சில குறிப்புகளை மன்றத்தில் மது லிமாயி படித்துக் காட்டினார்; 'இந்நிறுவனத்திடமிருந்து தேசாயின் மகன் மாதந்தோறும் ரூ. 2,050 ஊதியமாகப் பெறுகிறார்' என்றும் மது லிமாயி வெளியிட்டார்.

எனவே 'இவ்விஷயம் ஒழுங்குப் பிரச்சினைக் குழுவின் பரிசீலனையில் இருப்பதால், தேசாய் இராஜினாமாச் செய்யவேண்டும்' என்று மது லிமாயி வற்புறுத்தினார்.

இதற்குத் தேசாய் பதிலளிக்கையில், 'என் மகனுக்கு வியாபார நிறுவனங்களுடன் தொடர்பு இல்லை என்று நான் ஏற்கனவே தெரிவித்தது சரியே' என்று வாதாடினார்; 'மது லிமாயி சொல்கிறார் என்பதற்காக நான் இராஜினாமாச் செய்யப்போவதில்லை' என்றும் தேசாய் கூறினார்.

"நான் தலைமையமைச்சரின் பொறுப்புக்கு மட்டுமே உட்பட்டவன்; என்னை இராஜினாமாச் செய்யச் சொல்வது அவரது பொறுப்பாகும்; அமைச்சரவையில் நான் தேவையற்றவன் என அவர் கருதினால், நான் இராஜினாமாச் செய்கிறேன்; நான் குற்றவாளி என்று ஒப்புக்கொள்வது வெட்கமற்ற செயலாகும்" என்று மொரார்ஜி தேசாய் மேலும் சொன்னார்.

முன்னதாக ஒழுங்குப் பிரச்சினைத் தீர்மானத்தைக் கொணர்ந்த மது லிமாயி, மொரார்ஜி தேசாய் ஏன் இராஜினாமாச் செய்யதாக வேண்டும் என்பதற்கான காரணங்களை ஆணித்தரமாக எடுத்துச்காட்டிப் பேசினார். அவர் மேலும் கூறியதாவது:—

"கடந்த நாடாளுமன்ற கூட்டத்தின்போது நிதி ஒதுக்கீடு மசோதாமீது விவாதம் நடந்து கொண்டிருந்தது; அப்போது நானும், உமாநாத்தும், தேசாயின் மகன் வியாபார நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ளவர் என்றும், இறக்குமதி—ஏற்றுமதி விஷயங்கள் சம்பந்தமாக சில ஒழுங்கீனங்களில் தேசாயும் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்றும், வரி ஏய்ப்பு விவகாரத்திலும் அவர் உளவாக இருக்கிறார் என்றும் நாங்கள் குற்றஞ்சாட்டினோம்; ஆனால் தேசாயோ, 'என் மகன், என்னுடைய அந்தரங்கச் செயலாளராக ஆனது முதல் வியாபாரத் துறையுடன் சம்பந்தப்பட்டிருக்கவில்லை' என்று திரும்பத் திரும்ப மறுத்து வந்தார்.

"இவ்விஷயத்தை அம்பலத்துக்குக் கொணர்ந்தவர்களை 'நாய்'கள் என்றும தேசாய் வர்ணித்தார்."

மொரார்ஜி பதில்

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு மொரார்ஜி தேசாய் மிக எச்சரிக்கையான வார்த்தைகளைக் கொண்டு பதில் அளித்தார். அவர் கூறியதாவது:—

"இந்த ஒப்பந்தத் தாள்கள் உண்மையானதுதான்; இதை யாரும் மறுக்க முடியாது. இவை சட்ட பூர்வமான--பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தங்கள்.

"கந்திலால் தேசாய், 1965 ஏப்ரல் முதல் நாளிலிருந்து அவரது கடந்தகால சேவைகளுக்காக 'முடி ஆதாயங்களை'ப் பெற்றார் என்று ஒப்பந்தத் தாள்களில் தெளிவாகக் காணக் கிடக்கிறது. 'கமிஷன்' தருவது பற்றி அந்த ஒப்பந்தத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. வியாபாரத்தில் இது போல ஒப்பந்தம் செய்துகொள்வது இயல்பே. இதற்காகப் பதிலுக்கு கந்திலால் தேசாய் எதுவும் செய்வார் என்று அந்நிறுவனம் எதிர்பார்க்கவில்லை."

இந்த விளக்கத்துக்குப் பிறகு நாடாளுமன்ற அவைத் தலைவர், ஒழுங்குப் பிரச்சினையை நிராகரித்து விட்டார்.

நீதிமன்றங்களின் வேலை-குறைக்க அரசு முயற்சி

வழக்கறிஞர்களுக்கு அமைச்சர் மாதவன் வேண்டுகோள்

நீதி--நிர்வாகப் பிரிவினை குறித்துச் சட்டம்

சென்னை, ஜூலை 25—

"நீதிமன்றங்களின் அலுவல்களை இயன்றவரையில் குறைக்க வேண்டும்--அதன் எண்ணிக்கைகள் அதிகரிக்கக்கூடாது என்பதே தமிழக அரசின் நோக்கமாகும்"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், எழும்பூர் வழக்கறிஞர்கள் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

நீதிமன்றங்களின் முன்புள்ள சிவில், கிரிமினல் வழக்குகளின் எண்ணிக்கைகளைக் குறைப்பதற்கான யோசனைகளைத் தெரிவிக்குமாறு அவர், வழக்கறிஞர்களைக் கேட்டுக்கொண்டார்.

மதுவிலக்குச் சட்டத்தில் திருத்தம் பற்றி யோசனை

"மதுவிலக்குச் சட்டத்தில் திருத்தம் ஒன்று கொண்டுவருவது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது; மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் முதல் முறையாகக் குற்றஞ் செய்கிறவர்களுக்குச் சிறைத் தண்டனையோ அபராதமோ விதிப்பதற்குப் பதில், எச்சரிக்கையுடன் விடுதலை செய்து, அதிகாரிகளின் நன்னடத்தைக் கண்காணிப்பின் கீழ் அவர்களைக் கொண்டுவருவதே இந்தத் திருத்தத்தின் நோக்கமாகும்"

என்று அமைச்சர் மாதவன் விளக்கிக் கூறினார்.

நீதி -- நிர்வாகப் பிரிவினை

"நீதி -- நிர்வாகப் பிரிவினையைச் செய்வதற்காகச் சட்டமியற்றுவது பற்றி யோசிக்குமாறு மத்திய அரசு, மாநில அரசுகளின் கருத்தைக் கோரியிருக்கிறது. நிர்வாக நடவடிக்கைகள் மூலம் இப்போது இந்தப் பிரிவினை செயல்படுத்தப்படுகிறது. இந்தப் பிரச்சினையை ஆர அமரப் பரிசீலனை செய்து விரைவில் தமிழக அரசு முடிவெடுக்கும்" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

"நீதிமன்றங்களில் வசதிகளை அதிகரிக்கும் பணிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது; இதற்காக இந்த ஆண்டில -- இதுவரையில் ரூ. 20-இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

"வழக்கறிஞர்களின் அறைகளுக்கு வாடகை வசூலிக்கப்படுவதாகக் கூறுவது, ஆச்சரியமாக இருக்கிறது" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானுக்கு இரஷ்யக் கடனுதவி

யூகோவிலிருந்தும் கடன் பெற ஒப்பந்தம்

கராச்சி, ஜூலை 25—

பாகிஸ்தானுக்கு ரூ. 52 கோடி கடன் உதவியளிக்க இரஷ்யா ஒப்புக்கொண்டிருக்கிறது.

இரஷ்யாவுக்குச் சென்றிருக்கும் பாகிஸ்தான் வணிக அமைச்சர் இதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார் என்றும் கூறப்படுகிறது.

இதையும் சேர்த்தால் இரஷ்யா, பாகிஸ்தானுக்கு 1960 முதல் கொடுத்த உதவியின் அளவு ரூ. 180 கோடியாகும்.

இதுபோல் பல மடங்கு அதிகமான தொகையை அமெரிக்காவிலிருந்தும் பாகிஸ்தான் பெற்றிருக்கிறது.

கடந்த நான்கு ஆண்டுகளாக சீனாவிலிருந்து பாகிஸ்தான் 100 மில்லியன் டாலர் உதவியைப் பெற்றிருக்கிறது. அடுத்த 40 ஆண்டுகளில் வட்டியில்லாமல் திருப்பித் தரும் முறையில் இத்தொகை தரப்பட்டிருக்கிறது.

யூகோவிலிருந்து...

யூகோஸ்லாவியாவுடன் 660 இலட்சம் டாலருக்கான கடன் ஒப்பந்தம் ஒன்றையும், பாகிஸ்தான் செய்துகொண்டிருக்கிறது.

இரசாயனப் பொருட்கள், மருந்து மூலப் பொருட்கள் முதலியவற்றை இவ்வொப்பந்தத்தின் கீழ் யூகோஸ்லாவியா பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யுமாம்.

இந்தியாவில் என்புருக்கி நோய்

வறுமையில் உள்ளவர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்

என்புருக்கி நோய் (க்ஷய நோய்), சமுதாயத்திற்கு ஒரு பிரச்சினையாக இல்லாமலிருப்பதற்கு அதைக் குறைப்பதுதான் 'க்ஷய நோய்க் கட்டுப்பாடு' என்பதன் பொருளாகும். இன்னும் இதை எந்த நாடும் சாதிக்கவில்லை; எனினும், விரைவில் இந்த நிலையை அவை அடைந்துவிடும்.

முன்பெல்லாம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதுதான் இந்த நோயைக் கட்டுப்படுத்தும் முக்கிய வழியாக இருந்தது; இதன் மூலம் உலகின் பல பகுதிகளிலும் க்ஷய நோய் தொல்லை குறைந்து விட்டிருக்கிறது.

பி.சி.ஜி. ஊசி குத்துவதும், க்ஷய நோய்த் தடுப்பு மருந்துகளும் இந்நோயைக் கட்டுப்படுத்துவதை விரைவுபடுத்தியிருக்கின்றன. இவற்றின் அடிப்படையில்தான் தேசிய க்ஷய நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது.

நாம் இன்னும் க்ஷய நோயைக் கட்டுப்படுத்தவில்லை. க்ஷய நோய்க்குச் சிகிச்சை தேடி வருபவர்களுக்கு மருத்துவ வசதி அளிப்பதுதான் நமது முதல் நோக்கமாகும்.

நாடு முழுவதிலும் பி. சி. ஜி. இயக்கத்தின் ஒரு பகுதியாக என்புருக்கி (க்ஷயநோய்) பற்றி நடத்தப்பட்ட சோதனைகளிலிருந்து கிராம மக்களிடையேயும், நகரவாசிகளிடையேயும் பரவலாக இந்த நோய் இருப்பது தெரிய வந்தது.

1955—57-ல் நாடு முழுவதிலும் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது.

இந்நாட்டில் க்ஷயநோய் பரவலாக இருப்பதும், இதில் கிராமப் பகுதிக்கும்—நகரப் பகுதிக்குமிடையே இந்த நோயினால் வேறுபாடில்லை என்பதும் ஆய்விலிருந்து தெரியவந்தது. 'எக்ஸ்-ரே'யைப் பயன்படுத்திப் பார்த்ததில், மக்களில் சுமார் ஒன்றரை சதவிகிதம் பேருக்குத் தீவிர க்ஷயநோய் கண்டிருந்தது என்பதும், நோயாளிகளைப் பரிசோதித்ததிலிருந்து இவர்களில் கால் பகுதியினர் தொற்றும் தன்மையுள்ள நோயைப் பெற்றிருந்தார்கள் என்பதும் தெரியலாயிற்று.

இவ்வாறு, நம் நாட்டினர் சுமார் அறுபது எழுபது இலட்சம் என்புருக்கி நோயாளிகள் இருக்கிறார்கள். இவர்களில் இருபது இலட்சம் பேருக்குத் தொற்று நோய் ஏற்பட்டிருக்கிறது.

பெண்களைக் காட்டிலும் ஆண்களிடம்தான் இந்த நோய் அதிகமாயிருக்கிறது. ஆண்களிடையே, வயது உயர உயர இந்நோய் அதிகமாகக் காணப்படுகிறது. பெண்களிடையே, 35-வயதுக்குப் பிறகு குறைவாக இருக்கிறது.

பொருள் வசதி மிகவும் குறைவான பிரிவினரிடையே — அதாவது, சேரிகளில் வாழ்வோரிடையே இந்நோய் அதிகம் காணப்படுகிறது.

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சம் பேரில் சுமார் எண்பது—நூறு பேர் இந்நோய் காரணமாக மடிகிறார்கள் என்று மதிப்பிடப்படுகிறது. வசதி விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் இந்த எண்ணிக்கை 15 ஆகக் குறைந்திருக்கிறது.

மஞ்சட் காமாலை நோய்க்கு சித்த மருத்துவம்

சென்னையில் நடமாடும் மருத்துவக் குழு

சென்னை, ஜூலை 25—

மஞ்சள் காமாலைக்கு மருத்துவம் செய்வதற்கு, நடமாடும் சித்த மருத்துவக் குழு ஒன்றை அனுப்ப தமிழக அரசு தீர்மானித்திருக்கிறது.

இந்தக் குழு, முதல் வட்டம் புது வண்ணாரப்பேட்டை — செரியன் நகர் மருந்தகம்; 71, 72-வது வட்ட தாயார் சாகிப் தெரு மருந்தகம்; 92-வது வட்டம் கோடம்பாக்கம் ஆற்காடு சாலை மாநகராட்சி மருந்தகம் ஆகிய இடங்களில், இரண்டு நாட்களுக்கு ஒரு தடவை செல்லும்.

மாலை 5-மணியிலிருந்து 7-மணி வரை சிகிச்சை அளிக்கப்படும்.

கோடம்பாக்கம் மருந்தகத்தில் ஜூலை 26-ம் நாள் பிற்பகல் தனது பணியைக் குழு தொடங்கும்.

மஞ்சள் காமாலையினால் பாதிக்கப்பட்டவர்கள், இந்த சித்த மருத்துவ வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(3-ம் பக்கம் பார்க்க)

கோவை மாவட்டத்தில் அண்ணா நெடுஞ்செழியன் நிகழ்ச்சிகள்

30—7—68 காலை முதலமைச்சர் அண்ணா அவர்கள், கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுடன் ஈரோடு வந்து சேருகிறார்கள். இரயில் நிலையத்தில் சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவேற்கின்றனர்.

காலை 9 மணிக்கு ஈரோடு நகராட்சி, அண்ணா அவர்களுக்கும் திரு. நெடுஞ்செழியன் அவர்களுக்கும் வரவேற்பு அளிக்கிறது; நகராட்சி மன்றத் துணைக் கட்டிடத்தை அண்ணா அவர்கள் திறந்து வைக்கிறார்கள்.

காலை 10 மணிக்கு கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் கோபி கலைக் கல்லூரியைத் தொடங்கி வைக்கிறார்; அவ்விடத்திலேயே நடமாடும் நூல் நிலையம் ஒன்றைத் தொடங்கிவைப்பதுடன் வீடற்றோருக்கு வீட்டு மனைப் 'பட்டா'வும் வழங்குகிறார்.

அதே இடத்தில் கோபிநகராட்சி மன்றம்—கோபி ஊராட்சி ஒன்றியம் — தூக்கநாய்க்கன் பாளையம் ஊராட்சி ஒன்றியம் ஆகியவை சார்பில் வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்படும்.

மாலை 4-30 மணிக்கு கோபி பெரியார் திடலில், கோவை மாவட்டச் செயலாளர் உடுமலை ப. நாராயணன் எம்.பி. தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

மாலை 7-30 மணிக்கு ஈரோடு பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

இரா. நெடுஞ்செழியன்

அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் பிற்பகல் 2 மணிக்கு புதுச்சூரிபாளையம் கருப்பட்டி உற்பத்தி கூட்டுறவு சங்கக் கட்டிடத்தைத் திறந்துவைக்கிறார்.

2-30 மணிக்கு மொட்டணம் கருப்பட்டி உற்பத்தி கூட்டுறவுச் சங்கக் கட்டிடத்தை திறந்துவைக்கிறார்.

மாலை 3-30 மணிக்கு நம்பியூர் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

4-30 மணிக்கு கரட்டுப்பாளையத்தில் பள்ளிக்கூடத்தைத் திறந்து வைக்கிறார்.

5-30 மணிக்கு மோடர்பாளையம் பள்ளிக்கூடத்தைத் திறந்துவைக்கிறார்.

இரவு 7 மணிக்கு புஞ்சைப் புளியம்பட்டி பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு, பின்னர், இரவு 8-30 மணிக்கு சத்தியமங்கலம் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

பெண்ணாடம் பேரூராட்சி

தலைவராகக் . கழகத் தோழர் தேர்வு

1965-ம் ஆண்டிலிருந்து காங்கிரசு நிர்வாகத்தில் இருந்த பெண்ணாடம் பேரூராட்சி மன்றத்தின் தலைவர் பதவி விலகியதால், இடைத் தேர்தல் நடைபெற்றது; முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவரும் கழகத் தோழருமான திரு. வீ. இராமசாமி ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வெற்றி பெற்ற திரு. வீ. இராமசாமிக்கு ஊர் மக்கள் கைத்தறி ஆடைகளும், மாலைகளும் அணிவித்து மேளதாளத்துடன் திரு எம். செல்வராசு தலைமையில் ஊர்வலமாக அழைத்து வந்தனர்.

வெற்றியைக் கருதி நகர தி. மு. கழகச் சார்பிலும், எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றத்தின் சார்பிலும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

நில வரி ரத்து!

போபால், ஜூலை 25—

மத்தியப் பிரதேசத்தில், எல்லா விவசாய நிலங்கள் மீதும் ஜூலை 1-ம் நாளிலிருந்து நில வரியை ரத்து செய்து அவசரச் சட்டம் ஒன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

தாராபுரம் நகர தி.மு.க. மறுதேர்தல்

கோவை மாவட்டம் தாராபுரம் நகர தி.மு.க. கிளையில் நடைபெற்ற தேர்தலில் அவைத் தலைவர் பொறுப்புக்கான தேர்தல் தவிர, மற்ற பொறுப்புக்களின் தேர்தல்கள் குறித்து எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளையொட்டி, பரிசீலனை செய்து மறு தேர்தல் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, தாராபுரம் கிளையின் அவைத்தலைவர் பொறுப்பு தவிர மற்ற பொறுப்புகளுக்கான மறுதேர்தல், 29-7-68 திங்கள் காலை 10-மணிக்கு தாராபுரம் பயணியர் விடுதியில் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தலைமையில் நடைபெறும்.

—தலைமை கழகம் (தி.மு.க.)

பெரம்பலூர் தி. மு. க. மறு தேர்தல்

'ஏற்கனவே அறிவித்திருந்த 'அறிவிப்பைத் தொடர்ந்து பெரம்பலூர் தி. மு. கழக மறு தேர்தல் ஜூலைத் திங்கள் 29-ம் நாள் காலை 10-மணிக்கு பெரம்பலூர் கழகக் கட்டிடத்தில், தோழர் ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெறும்''

என திருச்சி மாவட்டச் செயலாளர் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

பந்தநல்லூர் தி. மு. கழகக் கிளை மறுதேர்தல்

"தஞ்சை மாவட்டப் பந்தநல்லூர் கிளையின் மறு தேர்தல், 28—7--68 ஞாயிறு காலை 10-மணிக்கு பந்தநல்லூர் கடைத் தெரு சத்திரத்தில் நடைபெறும்.

"ஆணையாளர் பெயர் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்''

என்று தஞ்சை மாவட்ட தி. மு. க. செயலாளர் அறிவிக்கிறார்.

கோவை நகர 4, 8-ஆகிய வார்டுகளில் மறுதேர்தல்

ஏற்கனவே அறிவித்திருந்த அறிவிப்பையொட்டி, கோவை நகர 4-வது வார்டு உட்கிளையின் எல்லாப் பொறுப்புக்களுக்கும், 8-வது வார்டு கிளையில் தலைமைக் கழகத்தால் அனுப்பப்படும் ஆணையாளரின் பரிசீலனைமீது மறு தேர்தல் எந்தெந்தப் பொறுப்புக்கு நடைபெறவேண்டும் என்று தெரிவிக்கப்படும் அந்தப் பொறுப்புக்களுக்கும் 28-7-68 ஞாயிறு காலை 10-மணிக்கு அந்தந்த வார்டுகளின் பொதுவான இடத்தில் தலைமைக் கழக ஆணையாளர் தோழர் கோ. செங்குட்டுவன் அவர்கள் தலைமையில் மறு தேர்தல் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கழகச் சட்ட திட்டம்

விதி 25--தேர்தல் பிரிவு 5 திருத்தம்

கழகச் சட்ட திட்டம் விதி 25 — தேர்தல் - பிரிவு 5 கீழ்க் காணும் வகையில் திருத்தப்படுகிறது.

சிற்றூர், பேரூர், நகர உட்கிளை, பெருநகர உட்கிளை ஆகிய அமைப்புக்களின் அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மேலமைப்புப் பிரதிநிதிகள், செயற்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளுக்குப் போட்டியிடுவோர், தொடர்ந்து ஐந்தாண்டுக்காலம் கழகத்தில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை.

நகரக் கிளை, பெருநகரக் கிளை, வட்டக் கழகம் ஆகிய அமைப்புகளின் அவைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், மேலமைப்புப் பிரதிநிதிகள் ஆகிய பொறுப்புகளுக்குப் போட்டியிடும் தோழர்கள், தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் கழகத்தின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

நகரக் கிளை, பெருநகரக் கிளை, வட்டக் கழகம் ஆகிய அமைப்புகளின் செயற்குழு உறுப்பினர்களாகப் போட்டியிடும் தோழர்கள், கழகத்தில் தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை.

'அறிவகம்'
சென்னை-13.
25—7—'68

---அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி.மு.க.

பண்ருட்டி நகர தி.மு.க. கிளை தேர்தல்

ஆணையாளர்
ப. உ. சண்முகம் எம்.எல்.சி.

ஏற்கனவே அறிவித்திருந்ததையொட்டி, பண்ருட்டி நகர தி.மு.க. கிளையின் தேர்தல் 30—7—68 ஞாயிறு காலை 10 மணிக்கு தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் திரு. ப. உ. சண்முகம் எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

திண்டிவனம் தி. மு. க. கிளை மறு தேர்தல்

தெ. ஆ. மாவட்டம் திண்டிவனம் தி.மு.க. கிளையின் எல்லாப் பொறுப்புகளுக்குமான மறு தேர்தல், 30—7—68 செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

தோழர் ப. உ. சண்முகம் எம்.சி., அவர்கள், தலைமைக் கழகச் சார்பான ஆணையாளராக இருந்து தேர்தலை நடத்தி வைப்பார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

அரியலூர் தி. மு. க. கிளை

செயலாளர் பொறுப்புக்கு மறு தேர்தல்

"அரியலூர் தி.மு.க. கிளையின் செயலாளர் பொறுப்புக்கான மறுதேர்தல், 29-7-68 மாலை 4 மணிக்கு, அரியலூர் வழிப் போக்கர் விடுதியில், தோழர் ஜி. பராங்குசம் எம்.எல்.சி. அவர்களைத் தேர்தல் ஆணையாளராகக் கொண்டு நடைபெறும்''

என மாவட்டக் செயலாளர் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

உடுமலை நகர தி.மு.க. மறு தேர்தல்கள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருப்பதையொட்டி, கோவை மாவட்டம் உடுமலை நகர தி.மு.க. கிளையின் அவைத் தலைவர், வட்டப் பிரதிநிதி ஆகிய பொறுப்புகளுக்கான மறு தேர்தல், 28—7—68 ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறும்.

ஆணையாளர் பெயர் விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

—தலைமை கழகம் (தி.மு.க.)

வ.ஆ.மாவட்ட தி.மு.க. நகர -- கிளைகளின் தேர்தல்கள்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளதையொட்டி, வ. ஆ. மாவட்டத்தின் கீழ்க்காணும் கிளைகளுக்கான தேர்தல்கள் --- கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆணையாளர்கள் தலைமையிலும், கீழ்க் குறிப்பிட்டுள்ள இடத்திலும் நேரத்திலும் நடைபெறும் :—

27—7—68

ஆம்பூர்
ஆணையாளர் : டி. பி. சீனிவாசன்
இடம் : கழகப் பணிமனை
நேரம் : பிற்பகல் 4-மணி

தானிப்பாடி
ஆணையாளர் : எம். என். இராமன்
இடம் : கழகப் பணிமனை
நேரம் : மாலை 4-மணி

வாணியம்பாடி
ஆணையாளர்: ஆர். சம்பங்கி
இடம் : பயணியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

30—7—68

அரக்கோணம்
ஆணையாளர் : மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
இடம் : பயணியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

இராணிப்பேட்டை
ஆணையாளர் : பெ. தா. ஈசுவரப்பன்
இடம் : பயணியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

திருப்பத்தூர்
ஆணையாளர் : எம். எஸ். இராதாகிருஷ்ணன்
இடம் : பயணியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

திருவண்ணாமலை
ஆணையாளர் : இரா. தர்மலிங்கம்
இடம் : பயணியர் விடுதி
நேரம் : காலை 10-மணி

குடியேற்றம்
ஆணையாளர் : மா. பா. சாரதி எம்.எல்.ஏ.
இடம் : பயணியர் விடுதி
நேரம் : மாலை 4-மணி

கலசப்பாக்கம்
ஆணையாளர் : பி. கே. முனுசாமி
இடம் : கழகப் பணிமனை
நேரம் : காலை10-மணி

கழகத் தேர்தல்

முக்கிய அறிவிப்பு

கழகச் சட்ட திட்டம் விதி 25--- பிரிவு 5-இல் திருத்தம் செய்து கழகப் பொதுச்செயலாளர் அவர்கள் விடுத்துள்ள அறிக்கைக்கேற்ப, ஆகஸ்டு 3, 4 ஆகிய நாட்களில் நடைபெறும் வட்டக் கழகத் தேர்தலில், செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்குப் போட்டியிட விரும்பும் தோழர்கள், தொடர்ந்து ஐந்தாண்டுக் காலம் கழகத்தில் உறுப்பினராக இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை என்பது இதன் மூலம் தெளிவு படுத்தப்படுகிறது.

வட்டக் கழகச் செயற்குழு உறுப்பினர்களுக்காக ஏற்கனவே தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பத் தாள்கள் அனுப்பியிருக்கும் தோழர்கள் தவிர, அந்தந்த வட்டக் கழகத் தேர்தல்களை நடத்திவைக்கத் தலைமைக் கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் ஆணையாளரிடம் தேர்தல் நாளன்று நேரிலேயே தேர்தல் துவங்குவதற்கு முன்பாக விண்ணப்பத் தாள்களைக் கொடுத்து செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலில் பங்கு கொள்ளலாம்.

வட்டச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான விண்ணப்பத் தாள்கள் தவிர வேறு பொறுப்புக்கான விண்ணப்பத் தாள்களை, ஆணையாளர், தேர்தல் நாளன்று நேரில் பெற்றுக் கொள்ளமாட்டார் என்பது திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

ஆட்டா மாவுக்குத் தமிழகத்தில் கிராக்கி இல்லை

ரேஷனை நீக்க அரசுக்குப் பரிந்துரை

திருச்சி, ஜூலை 25—

மத்திய அரசு நிர்ணயித்த கோட்டாவுக்காகத் தமிழகத்துக்குத் தயாரிக்கப்பட்ட ஆட்டாமாவு, கோதுமைத் தவிடு இருப்பு முழுவதையும் உணவுக் கார்ப்பரேஷனிடம் ஒப்படைப்பதென்று தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக இப்பண்டங்களுக்கு அதிகக் கிராக்கி இல்லை என்றும், இப்பண்டங்கள் மீதுள்ள நடமாட்டக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதையடுத்து வெளி மாநிலங்களிலிருந்து தாராளமாக இப்பண்டங்கள் வருவதாகவும, இதுவே அரசு மேற்கூறிய முடிவை எடுத்துள்ளதற்குக் காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

கால்நடைத் தீவனத் தயாரிப்பாளர்களுக்கும் கால்நடைப் பண்ணைகளுக்கும் இப்பண்டங்கள் தேவையான அளவுக்குப் பெர்மிட்டுகளை வழங்குமாறும், இருப்பு உள்ள ஆலைகளுக்கு டெலிவரி உத்தரவு தருமாறும் கலெக்டர்களுக்கும், சென்னை நகர துணைப் பங்கீட்டு கமிஷனருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலும், கோவையிலும் இப்பண்டங்களுக்கான கட்டுப்பாட்டை நீக்குமாறும் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பின்வரும் இடங்களில் சித்த மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படும் :—

இந்திய மருத்துவமனை, 73, பூந்தமல்லி நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம்.

சுவாமி தீனதாஸ் இலவச சித்த மருந்தகம், 3, பட்டினத்தார் கோயில் தெரு, திருவொற்றியூர்.

இலவச சித்த மருந்தகம், 27, பிடாரியார் கோயில் தெரு, ஜார்ஜ் டவுன், சென்னை.

5 ஆண்டுகளுக்கு ரூ. 6000 கோடி

இந்தியாவின் பாதுகாப்புச் செலவு

சிக்கனத்தைக் கையாள முயற்சியாம்

புதுடில்லி, ஜூலை 24—

"திருத்தியமைக்கப்பட்ட 1966—71-ம் ஆண்டுப் பாதுகாப்புத் திட்டத்துக்கு மொத்த முதலீடு ரூ. 6,000 கோடியாகும்"

என்று பாதுகாப்பு அமைச்சர் சுவரண் சிங் நாடாளுமன்ற மேலவையில் கூறினார்.

"இத்தொகையில் 1968 மே வரை (இரண்டு ஆண்டு இரண்டு மாதம்) செலவு ரூ. 1936 கோடியாகும்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

[திருத்தியமைக்கப்பட்ட 1966—71-ம் ஆண்டுப் பாதுகாப்புத் திட்டம், 1969—74 திட்டத்தில் இணைக்கப்படுவதற்காக மீண்டும் திருத்தியமைக்கப்படுகிறது என்று அண்மையில் வெளியான அதிகாரபூர்வமான அறிக்கைகள் கூறின.]

"பாதுகாப்புச் செலவினத்தில் பல்வேறு சிக்கன நடவடிக்கைகளை அரசு ஏற்கனவே எடுத்துள்ளது. செலவிட்ட தொகைக்கு அதிகபட்ச பலனைப் பெற முயற்சிக்கப்படுகிறது. சுமார் ரூ 52 கோடி அளவுக்குச் சிக்கனம் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளது. சிக்கனத்துக்காக மேற்கொண்டு நடவடிக்கைகள் பரிசீலனையில் உள்ளன" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மத்திய அரசு ஊழியர்களின் போர்க் கொடி!

செப். 19-ல் அடையாள வேலைநிறுத்தம் செய்ய முடிவு

புதுடில்லி, ஜூலை 26—

இருபது இலட்சத்திற்கும் அதிகமான மத்திய அரசு ஊழியர்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் மூன்று முக்கிய நிறுவனங்கள், செப்டம்பர் 19-ம் நாளன்று அடையாளபூர்வ வேலைநிறுத்தம் செய்யப் போவதாக அறவித்துள்ளன.

இரயில்வே ஊழியர்கள், அஞ்சல் – தந்தி ஊழியர்கள், தற்காப்புத் துறை ஊழியர்கள், சிவில் விமானப் போக்குவரத்து ஊழியர்கள், இதர மத்திய அரசு ஊழியர்கள் ஆகியோரின் சங்கங்கள், ஒருமுகமாக இம்முடிவை எடுத்துள்ளன.

1960-க்குப் பின், மத்திய அரசு ஊழியர்கள் நாடு முழுவதிலும் மேற்கொள்ளும் வேலைநிறுத்தம் இதுவேயாகும்.

இந்தி வெறியரின்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேத் கோவிந்ததாஸ் குறுக்கிட்டு, 'இந்தியில் கேட்கப்படும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் இந்தியில் தான் பதிலளிக்க வேண்டும்' என்ருர்.

சேத் கோவிந்த தாசின் இடைமறிப்பை அவைத் தலைவர் கண்டித்தார்.

"எந்த மொழியில் கேள்வி கேட்கப்படுகிறதோ அதே மொழியில் தான் பதிலளிக்கப்பட வேண்டும் என்று ஒரு மரபு இருந்துவருகிறது. அது இப்போது மீறப்படுகிறது" என்று சேத் கோவிந்த தாஸ் கூறினர்.

"மற்றவர்களைப் போலவே எனக்கும் இந்தி மொழியிடம் பற்றுதல் உண்டு" என்று செகசீவன்ராம் உரத்தக் குரலில் பதிலளித்தார்.

"இரு மொழிகளிலும் பேச உரிமையுண்டு" என்று அவைத் தலைவர் கூறினர்.

"அளிக்கப்படும் பதில்கள், சரியானதாக — உண்மையானதாக இருக்க வேண்டும்; அதுதான் முக்கியம்; எந்த மொழியில் பதில் அளிக்கப்படுகிறது என்பது முக்கியமல்ல" என்று ஷியோ நாராயணன் என்பவர் குறிப்பிட்டார்.

ரூ. 9 இலட்சம் செலவில் இலவசப் பாடப் புத்தகங்கள்

சென்னை மாநகராட்சி நடத்தும் 341 பள்ளிகளின் மாணவ --- மாணவியர் பெறுவர்

எட்டாவது வகுப்பு வரையில் வழங்க ஏற்பாடு

சென்னை, ஜூலை 26—

சென்னை மாநகராட்சி நடத்தும் 341 பள்ளிகளில் படிக்கும் மாணவ – மாணவிகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள், நோட்டுகள், சிலேட்டுப் பென்சில்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத திட்டம், இப்போது மேலும் மூன்று வகுப்புகளுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு, 5-ம் வகுப்புவரை படித்துவந்த 1,45,000 மாணவ -- மாணவிகள் இந்தத் திட்டத்தால் பயன்பெற்றனர்.

இவ்வாண்டு 1,91,978 மாணவ -- மாணவிகள், இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதால பயன் பெறுகின்றனர்.

மொத்தம் ரூ. 9 இலட்சம் செலவில் சென்னை மாநகராட்சி இலவசமாகப் பாட நூல்களை வழங்கி வருகிறது.

சென்ற ஆண்டு ரூ. 6 இலட்சம் செலவிடப்பட்டது.

இந்த ஆண்டு 6,79,020 பாட நூல்கள், 15,35,876 நோட்டுப் புத்தகங்கள், 1 14 423 சிலேட்டுகள், 13,73,076 சிலேட்டுப் பென்சில்கள், 15,58,574 பென்சில்கள் வழங்கப்படும்.

ஆலந்தூர் நகர தி. மு. க. கிளை தேர்தல்

ஆலந்தூர் நகர தி. மு. க. கிளையின் தேர்தல் 28—7—68 காலை 10-மணிக்கு ஆதம்பாக்கம் குணேபகார சாசுவத நிதி பள்ளிக் கட்டிடத்தில், தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

கரூர் நகர தி.மு.க. கிளைத் தேர்தல்

"ஏற்கனவே விடுத்த அறிவிப்பையொட்டி கரூர் நகர தி. மு. க. கிளைத் தேர்தல் 30—7—68 காலை 10 மணிக்கு கரூர் நகர டாக்கி-டாக் தியேட்டரில் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளர் தலைமையில் நடைபெறும்."

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

அரண்மனைக்குறிச்சி தி.மு.க. கிளைத் தேர்தல்

"திருச்சி மாவட்டம் அரண்மனைக் குறிச்சி தி.மு.க. கிளையின் மறுதேர்தல் தலைமைக் கழக அறிவிப்பின்படி 30-7-68 பிற்பகல் 2 மணிகு நடைபெறும்"

என்று, திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அறிவிக்கிருர்.

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதிகளை அதிகரிக்க முயற்சி

சோவியத் இரஷ்யா அறிவித்துவிட்டதாம்!

புதுடில்லி, ஜூலை 26—

இறக்குமதிப் பொருள்களைப் பாகிஸ்தானிலிருந்து அதிகரிக்க விரும்புவதாகச் சோவியத் இரஷ்யா, பாகிஸ்தான் அரசுக்குத் தெரிவித்திருக்கிறது.

முக்கியமான உற்பத்திப் பொருட்களை ஏராளமாகத் தருவிப்பதென இரஷ்யா விருப்பம் தெரிவித்திருக்கிறது.

பொள்ளாச்சி நகர தி.மு.க. கிளை மறுதேர்தல்

பொள்ளாச்சி நகர தி. மு. க. கிளையில் நடைபெற்ற தேர்தலையொட்டி எழுப்பப்பட்ட ஆட்சேபனைகளின் பேரில், தலைமைக் கழகம் பரிசீலனை செய்து, கிளையின் கீழ்க் காணும் பொறுப்புகளுக்கான மறுதேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்படுகிறது.

மறு தேர்க்ல், 30—7—68 செவ்வாய் காலை 10-மணிகு வெங்கடேசா காலனியில், தலைமைக் கழகம் சார்பான ஆணையாளர் தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி. அவர்கள் தலைமையில் தேர்தல் நடைபெறும்.

அவைத் தலைவர்

செயலாளர்

துணைச் செயலாளர்

வட்டப் பிரதிநிதிகள் ஐந்து பேர்

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

மணப்பாறை நகர தி. மு. க. தேர்தல்

"ஏற்கனவே விடுத்த அறிவிப்பையொட்டி மணப்பறை நகர தி. மு. க. கிளைத் தேர்தல் 30—7—68 காலை 10 மணிக்கு பொதுக்குழு உறுப்பினர் கு. காமாட்சி அவர்களை ஆணையாளராகக் கொண்டு மணப்பாறை பயணிகள் விடுதியில் நடைபெறும் என்பதை தலைமைக் கழக அனுமதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்"

என திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அறிவிக்கிருர்.

தோப்புத்துறை தி.மு.க. கிளை மறுதேர்தல்

"தஞ்சை மாவட்டம் தோப்புத்துறை தி. மு. க. கிளையின் மறுதேர்தல், 30-7-68 காலை 10-மணிக்கு நாகை வட்டச் செயலாளர் அ. இராசகோபால் அவர்களை ஆணையாளராகக்கொண்டு நடைபெறும்"

என தஞ்சை மாவட்டச் செயலாளர் ப. நாராயணசாமி அறிவிக்கிருர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

27--7--68

சென்னை 80-வது வட்டம்

தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு, சேப்பாக்கம் பார்த்தசாரதி நாயுடு தெருவில்; தலைவர்: அ. வீ. அகிலன்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், க. அறிவழகன் எம்.எல்.சி, சிட்டிபாபு எம்.பி., என்.வி.என். சோமு, சனார்த்தனம், சி. ஆதிகேசவன், ஆ. வெ. செயராம், மா. வெ. இளங்கோ, டி. சந்திரன் இரா. இளவரசு.

28--7--68

திருச்சி

20-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு கோட்டை பந்தேகானு தெருவில்; தலைவர்: கி. இராமச்சந்திரன்; பேசுவோர்: அன்பில் தர்மலிங்கம், எம். எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., அ. நடராசன், எஸ். ஏ. ஜி. ராபி, ஏ. வி. கிருட்டினமூர்த்தி, கே. எல். ஆறுமுகம். (தேவராசன்–நிர்மலா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

பழையநெயவேலி

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு கலைஞர் திடலில்; தலைவர்: நெ. சி. வெங்கடாசலம்; பேசுவோர்: சி. தமிழரசி, பழ. தட்சிணாமூர்த்தி, ம. வை. அழகிரி, ந. இராசரத்தினம், ஐ. இருதயம், சி. டி. ஜெரி.

திண்டிவனம்

தி. மு. க. சார்பில் தென்காசி வெற்றிவிழா; மாலை 6-30 மணிக்கு காந்தியார் திடலில்; தலைவர்: மு. தங்கவேலு; பேசுவோர்: இரெ. இளமவழுதி எம்.எல்.ஏ., புலவர் பொன்னிவளவன், ஆ. தங்கவேலு, செ. முனுசாமி, எஸ் நடராசன், மு. திராவிடமணி, தி. க. கோட்டையன் எஸ். பாண்டுரங்கன், தி. க குமாரசாமி.

சேலம்

19-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு அண்ணு நகரில்; தலைவர்: சே. இராமசாமி; பேசுவோர்: இரா. வெற்றிகொண்டான், வீரமணி எம்.எல்.ஏ., ஏ. மாரியப்பன் எம்.சி., சிற்றுளிசுப்பிரமணியம், கே.எஸ் அமிர்தம், கே. எஸ். மாணிக்கம், வி. குட்புசாமி.

மதுரை

சிங்கத் தமிழன் சின்னசாமி நினைவுமன்ற இரண்டாம் ஆண்டு விழா; மாலை 7 மணிக்கு ருக்மணி பாளையம் 1-வது தெருவில்; தலைவர்: ஏ. தங்கமணி; பேசுவோர்: கேரள சுந்தரம், கு. திருப்பதி, எழில் விழியன், வி. சு. மணி.

நெடுங்காடு

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு மாரியம்மன் கோயில் அருகில்; தலைவர்: எஸ். இருதயசாமி; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், எஸ். இராமசாமி, அப்துல்முகம்மது, சத்தியமூர்த்தி, எஸ். சண்முகம், நடராசன்.

தொழிலாளர் கூட்டுறவுப் பண்டகசாலைத் திறப்பு

தச்சநல்லூர் கணபதி ஆலைத் தொழிலாளர் கூட்டுறவுப்பண்டகசாலைத் துவக்கவிழா, 28—7—68 மாலை 5 மணிக்கு வி சங்கரலிங்கம் தலைமையில் நடைபெறும்; திரு அ. வெ. சுப்பிரமணியம் திறந்து வைப்பார்; தோழர்கள் இரா. புல்லையா, ஞானகோமதி நாயகம், ஈ. இராமசாமி ஆகியோர் பேசுவர்; வீ. முருகு வரவேற்புரையாற்றுவார்.

அஞ்சல் கட்டண உயர்வின் எதிரொலி

சிறிய பத்திரிகைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன

மக்களவையில் உறுப்பினர் சுட்டிக்காட்டினர்

புதுடில்லி, ஜூலை 25—

"சிறிய செய்திப் பத்திரிகைகளுக்கு அஞ்சல் கட்டணங்களில் தனிச் சலுகை அளிப்பது பற்றி மறுபரிசீலனை செய்யப்படும்"

என மக்களவையில், தகவல் அறிவிப்புத் துணையமைச்சர் ஐ. கே. குஜ்ரல் கூறினர்.

"அண்மையில் அஞ்சல் கட்டணங்கள் உயர்த்தப்பட்டதையடுத்து சிறிய செய்திப் பத்திரிகைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன" என்று உறுப்பினர்கள் பலர் எடுத்துக்காட்டினர்.

பழைய கடனை அடைக்கப் புதிய கடன்

மேற்கு ஜெர்மனியிடம் இந்தியா ஒப்பந்தம்

புதுடில்லி, ஜூலை 26—

இந்தியா, மேற்கு ஜெர்மனியிடமிருந்து ரூ 46 கோடி அளவுக்கு கடன் பெறும் ஒப்பந்தம் ஒன்று இங்கு கையெழுத்தாகியிருக்கிறது.

மேற்கு ஜெர்மனிக்கு இந்தியா தரவேண்டிய கடனில் ரூ 11 கோடி, இத்தொகையில் கழித்துக் கொள்ளப்படுமாம்.

நலத்துறை அமைச்சர்

எஸ். ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

ஜூலை 28: காலை 9 மணி: திருத்துறைப்பூண்டி—அரசினர் மருத்துவமனை எக்ஸ்-ரே கட்டிடத் திறப்பு விழா; 10-30 மணி: ஆதிரெங்கம்—பாலம் திறப்பு விழா; முற்பகல் 11-30 மணி: திருத்துறைப்பூண்டி — ஊராட்சி ஒனறியம் வரவேற்பும், முதலமைச்சரின் உருவப் படத் திறப்பு விழாவும்; மாலை 5 மணி: இராயநல்லூர்—ஊராட்சி மன்ற வரவேற்பு; 6-30 மணி: இராயநல்லூர் — பொதுமக்கள் வரவேற்பு.

தலைவர்கள் பேச்சு ஒலிபரப்பு

சென்னை 5-வது வட்டம் பெரிய மார்க்கெட் வியாபாரிகள் சார்பில் மார்க்கெட் அருகில் 28—7—68 மாலை 7 மணிக்கு இரா. சி. கோதண்டராமன் தலைமையிலும்–க. ஆறுமுகம் முன்னிலையிலும், அறிஞர் அண்ணு, இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கி. மனோகரன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எம். ஜி. ஆர். ஆகியோரின் பேச்சு ஒலிபரப்பப்படும்.

விஷமச் செய்திக்கு மறுப்பு

காங்கிரசு நாளேடு ஒன்றில், 'நாதியற்ற பெண்ணிடம் துணிகரத் திருட்டு' என்ற தலைப்பிட்டு காரணை கிராம தி. மு. க. முக்கியஸ்தர் கைது செய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்துள்ளனர் என்பதாக ஒரு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

"கைது செய்யப்பட்டவர் தி. மு. கழக உறுப்பினரே அல்லர்; அப்படியிருக்க, 'முக்கியஸ்தர்' எனச் செய்தி வெளியிட்டிருப்பது விஷமத்தனமானது" என்று கண்டாச்சிபுரம் தி. மு. க. செயலாளர் இ. ர. சுப்பிரமணியம் அறிவிக்கிருர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.